ISSN 2456-0243

தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
முரண்களரி படைப்பகம்
கல்வெட்டு பேசுகிறது

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் **ச.பிரியதர்சினி,** தமிழ்த்துறைத்தலைவர்

பதிப்பாசிரியர் குழு

முனைவர் **சு.பரணி** முனைவர் **பொ.ராணி** முனைவர் **பா.நளினிப்ரியா**

முனைவர் **அ.கலைவாணி** உதவிப் பேராசிரியர்கள், தமிழ்த்துறை.

திருக்குறள் பார்வையில் அறநெறி மற்றும் அகமேலாண்மைச் சிந்தனைகள்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் **ச.பிரியதர்சினி**,
தமிழ்த்துறைத்தலைவர்

பதிப்பாசிரியர் குழு

முனைவர் **சு.பரணி**
முனைவர் **பொ.ராணி**
முனைவர் **பா. நளினிப்ரியா**
முனைவர் **அ.கலைவாணி**
உதவிப் பேராசிரியர்கள், தமிழ்த்துறை.

முனைவர் **கு.ஆரோக்கிய மறைச்செல்வி**
பேராசிரியர், ஒருங்கிணைப்பாளர், தேசிய கல்விக் கொள்கை (NEP Cell)

திருக்குறள் **கணேசன்**
நிறுவனர், திருக்குறள் உலகம் கல்விச்சாலை

முனைவர் **ஜெ. முனுசாமி**
முரண்களரி படைப்பகம்

கவிஞர் **சொர்ணபாரதி**
ஆசிரியர், கல்வெட்டு பேசுகிறது

நா. கணேசன்
துணையாசிரியர், கல்வெட்டு பேசுகிறது

கலைஞர் **பால சுகுமார்**
இலண்டன்,
ஆலோசகர், கல்வெட்டு பேசுகிறது

வெளியீடு

தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
முரண்களரி படைப்பகம் - கல்வெட்டு பேசுகிறது

நூல் தலைப்பு	:	திருக்குறள் பார்வையில் அறநெறி மற்றும் அகமேலாண்மைச் சிந்தனைகள்
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் ச. பிரியதர்சினி
முதற்பதிப்பு	:	பிப்ரவரி 2026
பக்கம்	:	232
விலை	:	ரூ. 450/-
வெளியீடு	:	தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் முரண்களரி படைப்பகம் கல்வெட்டு பேசுகிறது ISSN : 2456-0243
அச்சாக்கம்	:	பென்டகன் என்டர்பிரைசஸ், சென்னை

கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள கருத்துகளுக்கு அந்தந்தக் கட்டுரையாளரே பொறுப்பாவார்.

அமைப்புக்குழுவினர்

தலைமைப் புரவலர்

முனைவர் **தி.ச.க. மீனாட்சிசுந்தரம்**
நிர்வாக அறங்காவலர் - வேந்தர்
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

புரவலர்கள்

முனைவர் **வை.பாரதி ஹரிசங்கர்,**
துணைவேந்தர்

முனைவர் **ஹை.இந்து**
பதிவாளர்

ஆலோசனைக் குழுத்தலைவர்கள்

முனைவர் **சஷி பிரபா ஜெயின்**
முதன்மையர், கலை மற்றும் சமூக அறிவியல் புலம்

அமைப்புத் தலைவர்

முனைவர் **ச.பிரியதர்சினி**
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் **சு.பரணி**
முனைவர் **பொ.ராணி**
முனைவர் **பா. நளினிப்ரியா**
முனைவர் **அ.கலைவாணி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முனைவர் **கு.ஆரோக்கிய மறைச்செல்வி**
பேராசிரியர், ஒருங்கிணைப்பாளர், தேசிய கல்விக் கொள்கை (NEP Cell)

கருத்தரங்க அமைப்புக் குழுவினர்

முனைவர் **மு.கவிதா**
முனைவர் **ச.குருஞானாம்பிகா**
முனைவர் **த.நாகம்மாள்**
முனைவர் **ம. கீதா**
முனைவர் **அ.புஷ்பா**
உதவிப்பேராசிரியர்கள், தமிழ்த்துறை

Avinashilingam Institute for Home Science and Higher Education for Women
Deemed to be University Estd. u/s 3 of UGC Act 1956, Category A by MHRD (now MoE)
Re-accredited with A++ Grade by NAAC. CGPA 3.65/4, Category I by UGC
Coimbatore - 641 043, Tamil Nadu, India

Dr. V. Bharathi Harishankar, Ph.D., FRSA
Vice Chancellor

வாழ்த்துரை

மனிதன் தன்னைத் தானே மேலாண்மை செய்யும் திறனே சமூக மேலாண்மையின் அடித்தளம் என்பதைக் கற்றுத் தரும் வள்ளுவரின் கருத்துகள், இன்றைய வாழ்க்கைச் சூழலில் மிகுந்த பொருத்தத்துடன் விளக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அறம் என்பது வெளிப்புற ஒழுக்கமாக மட்டும் அல்லாது, அகத்திலிருந்து உருவாகும் சிந்தனை, செயல், உணர்வு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கூறுகளாகும்.

பொறுமை, சுயக்கட்டுப்பாடு, நேர்மை, சிந்தனைத் தெளிவு போன்ற அக மேலாண்மைத் திறன்கள் இல்லாமல் நிலையான வெற்றியும் உயரிய வாழ்வும் சாத்தியமில்லை என்பதை திருக்குறள் வழி உணர்த்தியுள்ள இந்த அணுகுமுறை, இன்றைய தலைமுறைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. திருக்குறள் என்பது காலம், இனம், மொழி எனும் எல்லைகளைத் தாண்டி மனித வாழ்வின் ஒவ்வொரு பரிமாணத்தையும் நெறிப்படுத்தும் ஒப்பற்ற அறநூல் ஆகும். அந்த வகையில், திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு அறநெறியும் அக மேலாண்மைச் சிந்தனைகளைத் தொடர்புப்படுத்தி ஆராய்ந்துள்ள இம்முயற்சி மிகுந்த பாராட்டிற்குரியது.

மனித வாழ்வை மேம்படுத்தும் அறநெறிகளை அக மேலாண்மைச் சிந்தனைகளுடன் இணைத்து, திருக்குறளின் நிரந்தரத்தன்மையையும் சமகாலப் பயன்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ள இந்த அறிவார்ந்த முயற்சிக்கு மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய ஆய்வுகள் திருக்குறளின் ஆழத்தையும் அதன் வழி வாழ்க்கைக்கு வழிகாட்டும் திறனையும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இந்நிலையில் நம் நிறுவனத் தமிழ்த்துறையும் முரண்களரி படைப்பகம் மற்றும் கல்வெட்டுப் பேசுகிறது என்ற பன்னாட்டு இலக்கிய இதழும் மற்றும் கோவை திருக்குறள் உலகம் கல்விச்சாலையும் இணைந்து திருக்குறள் பார்வையில் அறநெறி மற்றும் அக மேலாண்மைச் சிந்தனைகள் என்னும் பொருண்மையில் நடத்துகின்ற இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் நிகழ்வது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இக்கருத்தரங்கினை சிறப்புற நடத்துவதற்கு உறுதுணையாக செயல்பட்ட தமிழ்த்துறைப் பேராசிரியர்களை வாழ்த்துகின்றேன்.

என்றும் அன்புடன்

(வை. பாரதிஹரிசங்கர்)

✆ Office : 0422-2440140 ∗ Vice Chancellor : 0422-2443219 ∗ Fax : +91-422-2438786 ∗ E-mail : vc@avinuty.ac.in ∗ www.avinuty.ac.in

Re-accredited by NAAC with 'A++' Grade CGPA 3.65/4
Graded as Category-I University Recognised Under Section 12B by the UGC
Ranked 98 among Universities
ARIIA ATAL RANKING OF INSTITUTIONS ON INNOVATION ACHIEVEMENTS 11-50 Band in NIRF Innovation Category
Granted Category A Status by MHRD (now MoE) - Top most rating for Deemed-to-be-Universities

Avinashilingam Institute for Home Science and Higher Education for Women
Deemed to be University Estd. u/s 3 of UGC Act 1956, Category A by MHRD (now MoE)
Re-accredited with A++ Grade by NAAC. CGPA 3.65/4, Category I by UGC
Coimbatore - 641 043, Tamil Nadu, India

Dr. (Mrs.) H. Indu
M.Sc., M.Ed., M.Phil., M.B.A., Ph.D.
Registrar (i/c)

பாராட்டுரை

திருக்குறள் என்பது தமிழரின் வாழ்வியல் வழிகாட்டி நூலாக மட்டுமல்லாது, உலக மனிதகுலத்திற்கே பொதுவான அறநெறிக் கையேடாக விளங்குகிறது. திருவள்ளுவர் மனித வாழ்வை அறம், பொருள், இன்பம் என்ற மூன்றின் அடிப்படைகளில் அமைத்துக் கூறுகிறார். இவற்றில் அறநெறியும் அக (மனம்) மேலாண்மையும் மனித வாழ்க்கையின் அடித்தளமாகத் திகழ்கின்றன. தனிமனித ஒழுக்கம் முதல் சமூக ஒழுங்கு வரை அனைத்தையும் திருக்குறளானது மிகத் தெளிவாக வழிநடத்துகிறது என்பதில் மாற்றமில்லை.

அறநெறி என்பது மனிதனின் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிமுறைகளின் தொகுப்பாகும். திருக்குறளில் அறம் என்பது மனிதனின் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றக்கூடிய நடைமுறை நெறியாக விளங்குகிறது.

அன்பு, உண்மை, பொறுமை, ஈகை, அகிம்சை ஆகிய பண்புகள் அறநெறியின் முக்கிய கூறுகளாகக் கருதப்படுகின்றன. இவை மனிதனை மிக உயர்ந்த நெறியில் நிலைநிறுத்துகின்றன.

அறநெறியும் அகமேலாண்மையும் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படக்கூடிய ஒன்றாகும். மனம் கட்டுப்பாட்டில் இருந்தாலே அறநெறியினை நம்வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முடியும். அவ்வகையில் மனித வாழ்வின் உயர்வு வெளிப் புற வெற்றிகளில் அல்ல; மனக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்த உள்ளார்ந்த வாழ்க்கையில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து இன்றைய ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுக்களங்களாகக் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் நம் நிறுவனத் தமிழ்த்துறையும் முரண்களரி படைப்பகம் மற்றும் கல்வெட்டுப் பேசுகிறது என்ற பன்னாட்டு இலக்கிய இதழும் மற்றும் கோவை திருக்குறள் உலகம் கல்விச்சாலையும் இணைந்து, திருக்குறள் பார்வையில் அறநெறி மற்றும் அக மேலாண்மைச் சிந்தனைகள் என்னும் பொருண்மையில் நடத்துகின்ற பன்னாட்டுக் கருத்தரங்கமானது நிகழ்வது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இக்கருத்தரங்கமானது சிறப்புற நடத்துவதற்கு உறுதுணையாக செயல்பட்ட தமிழ்த்துறைப் பேராசிரியர்களை வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்,

இந்து

(ஹை. இந்து)

✆ Office : 0422-2440241 ❖ Registrar : 0422-2451252 ❖ Fax : +91-422-2441252 ❖ E-mail : registrar@avinuty.ac.in

Re-accredited by NAAC with 'A++' Grade CGPA 3.65/4
Graded as Category-I University Recognised Under Section 12B by the UGC
Ranked 98 among Universities
ARIIA ATAL RANKING OF INSTITUTIONS ON INNOVATION ACHIEVEMENTS
11-50 Band in NIRF Innovation Category
Granted Category A Status by MHRD (now MoE) - Top most rating for Deemed-to-be-Universities

உள்ளடக்கம்

1.	திருக்குறளில் சங்க யாப்பியல் முனைவர் ப.அன்பரசி	10
2.	திருவள்ளுவரின் சினம்: உளவியல் பகுப்பாய்வு அடிப்படையில் ஓர் ஆய்வு. செ. பாலமுருகன்	13
3.	இந்தியப் பண்பாட்டு அடையாளமும் திருக்குறளும் முனைவர் பொ.ராணி	16
4.	திருக்குறள் காட்டும் அறப்பண்பாடு முனைவர் ம.கீதா,	20
5.	திருக்குறள் வளர்ச்சியில் இதழ்களின் பங்களிப்பு முனைவர் த.நாகம்மாள் (SS)	24
6.	திருக்குறளில் அறநெறிச் சிந்தனைகள் வே.கணேசமூர்த்தி	28
7.	ஒப்பியல் நோக்கில் சங்க இலக்கியம் - திருக்குறள் வழி சூழலியல் விழுமியங்கள் முனைவர்.ச.குருஞானாம்பிகா	30
8.	வள்ளுவம் வகுத்த வாழ்வியல் நெறிமுறைகள் முனைவர் து.ஜெமிலா மார்ஷல்	34
9.	குறள் கூறும் தனிமனித அறங்கள் முனைவர் கே. இரா. கமலாமுருகன்,	38
10.	சமகால வாழ்வியலில் அறநெறியின் பங்கு - வள்ளுவன் வழியில் இரா.நரசிம்மன்,	41
11.	திருக்குறள் இயம்பும் அகமேலாண்மைத் தளங்கள் ஆ. நித்தின்	46
12.	சங்க இலக்கியத்தின் முல்லைத்திணைப் பாடல்கள் காட்டும் அறச் சிந்தனைகள் ரா.கோகிலவாணி, முனைவர் த.நாகம்மாள்	51
13.	தூதெனும் அறமும் வள்ளுவமும் முனைவர். அ.புஷ்பா	54
14.	திருக்குறளில் அறநெறிச் சிந்தனைகள் சா. ரசபுனிசா பேகம்	57

15. **திருக்குறளில் பெண்ணியக் கோட்பாடு**
முனைவர் இரா.இராஜதுரை 60

16. **திருக்குறளில் மனம்**
முனைவர். செ.ராஜேஸ்வரி 63

17. **திருக்குறளில் மேலாண்மை**
முனைவர் இரா.ரேணுகாதேவி 66

18. **திருக்குறளில் அறச்சிந்தனைகள்**
(பிற இலக்கிய ஒப்புநோக்கிலான திறனாய்வு)
முனைவர் ச.கவிதா, 70

19. **திருக்குறளில் மனம்**
முனைவர் த.சங்கரன் 75

20. **மனக்கவலை மாற்றும் அறமருந்து**
திருக்குறளில் அகமேலாண்மைச் சிந்தனைகள் பற்றிய ஓர் ஆய்வு
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை 78

21. **திருக்குறளில் அகமரபு ஆக்கங்கள்**
முனைவர் வா. விக்னேஷ் 83

22. **வள்ளுவரின் வாழ்வியல் அறம்**
இ.யோகராஜ், 87

23. **சமகால வாழ்வியலில் அறநெறியின் பங்கு**
முனைவர் செ.செல்வ சுகன்யா 91

24. **பெண் தெய்வ வழிபாடு**
(கலிங்கத்துப் பரணியை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு)
திருமதி. **ஓசாநிதி சந்திரமேகன்** 96

25. **பொய்யாமொழியில் தலைவியின் வனப்பு**
முனைவர் மு. கவிதா 100

26. **குறள் கூறும் நன்னெறி**
முனைவர் பா.நளினிப்ரியா 104

27. **வள்ளுவமும் சங்க மகளிரின் அரசியல் அறிவும்**
இரா.கற்பகவள்ளி - முனைவர் மு. கவிதா 107

28. **பிறன்பழிப்பது இல்லாயின் நன்று**
முனைவர் சு.காந்திதுரை 111

29. **வாயுறை வாழ்த்து நோக்கில் புறநானூற்றில் கையறுநிலைத்துறை**
நா.சௌமியா-முனைவர் மு.கவிதா 114

30. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் அற இலக்கியத் தாக்கம்
ரா.சத்யா செல்வி - முனைவர் ம.கீதா 118

31. ஒப்புமை நோக்கில் துறவு நிலை
க.சுபலா - முனைவர் ம.கீதா 123

32. திருக்குறளில் மனம்
முனைவர் ந.சுதா 127

33. திருக்குறளில் மேலாண்மை சிந்தனைகள்
ஸ்ரீநிதி. சு - முனைவர் ச.குருஞானாம்பிகா 131

34. திருக்குறளும் எட்டுத்தொகையும் காட்டும் இல்லற நெறிகள்
ர.ஆர்த்தி - முனைவர் ம.கீதா 134

35. திருக்குறளை அடியொற்றி இனியவை நாற்பது அறநெறிச் சிந்தனைகள்
து.தர்ஷினி - முனைவர் ச. கவிதா 138

36. திருவள்ளுவர் கூறும் வாழ்வியல் சிக்கலில் கோபமும் தீர்வுகளும்
சி.தௌபிகா பானு - முனைவர் த.நாகம்மாள் 141

37. பழங்குடியினரின் வாய்மொழி வழக்காறுகளில் திருக்குறள் அறப் பொருத்தப்பாடுகள்
செல்வி ந.நதியா - முனைவர் ச.கவிதா 145

38. வள்ளுவரும் வள்ளலாரும் புலால் மறுத்தல்
முனைவர் அ.கலைவாணி 150

39. ஜெயமோகனின் சோற்றுக்கணக்குச் சிறுகதையில் குறள் காட்டும் அறங்கள்
பவதாரணி குணசேகரன் - முனைவர் ப.சுடலைமணி 154

40. திருக்குறள் வழி கம்பராமாணத்தில் அகவுணர்வுச் சிறப்புரைத்தல்
வெங்கடலட்சுமி. ம. - முனைவர் ச.குருஞானாம்பிகா 158

41. வள்ளுவர் காட்டும் அகமொழி
த.சிவசெல்வி - முனைவர் பொ.ராணி 163

42. திருக்குறள் நாச்சியார் திருமொழியின் வழி பெண்களின் உளவியல்
பா.பவித்ரா - முனைவர் சு.பரணி, 167

43. இறைமாட்சியின் முக்கியத்துவமும் திருக்குறளும்
கா.சாருமதி - முனைவர் அ.புஷ்பா 171

44. புறநானூறு மற்றும் திருக்குறள் காட்டும் வாழ்வியல் அறங்கள் ஒப்பீடு
கௌசல்யா. க, - முனைவர் ச.குருஞானாம்பிகா 175

45. திருக்குறளில் நலம் புனைந்துரைத்தல்
மா.பி.காய்தரி - முனைவர் ச.பிரியதர்சினி 180

46. குறிஞ்சிப்பாட்டுத் தலைவியும் வள்ளுவனின் வாழ்க்கைத் துணைநலமும் - ஓர் ஒப்பீடு
கா.ஹர்சினி துர்க்கா. - முனைவர் பா.நளினிப்ரியா 185

47. ஒப்புமை நோக்கில் திருக்குறள் நாலடியார் காட்டும் கல்வி
ப.வ.கிருத்திகா - முனைவர் ம.கீதா 189

48. திருக்குறளில் விருந்தோம்பல்
மோனிகா உ, - முனைவர் ச. பிரியதர்சினி 192

49. திருக்குறள் மற்றும் திருமந்திரத்தில் விருந்தோம்பல் அறம்
சி.நிதர்சனா - முனைவர் சு.பரணி 196

50. திருக்குறளில் அக மேலாண்மை
முனைவர் சு.பரணி 200

51. திருக்குறள் நோக்கில் தொல்காப்பியத் தலைவனின் விழுமியங்கள்
ஆ.காயத்ரி - முனைவர் மு. கவிதா 205

52. வள்ளுவர் சொல்நெறியில் அக மேன்மை
கணேசன் நா 210

53. தமிழ்ச் சமூகத்தில் அயோத்திதாசர் கட்டமைத்த திருக்குறள் அறச்சிந்தனைகள்
முனைவர் ச.பிரியதர்சினி 214

54. SUPREMACY OF THIRUKKURAL OVER ANY OTHER WORLD CLASS PHILOSOPHY
Dr. Meignani Prabhakarababu 217

55. Moral Values and Ethical Praxis in Thirukkural: An Intertextual Analysis with English Literary Works
Dr Swetha S, 221

56. The Global Relevance of Thirukkural: Ethical Reflections on Lisa Scottoline's After Anna
Berdhisha P - Dr. S. Kalamani 224

57. Food Images in the Thirukkural: An Ecocritical Re-reading
Deepthi C - Prof.Dr. S Kalamani 228

சமகால வாழ்வியலில் அறநெறியின் பங்கு - வள்ளுவன் வழியில்

இரா.நரசிம்மன்,
ஆராய்ச்சி மாணவர், தத்துவ, பண்பாட்டு
மற்றும் சமயத்துறை, பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி),
மேலையூர் - 609107, தமிழ்நாடு.

ஆய்வுச்சுருக்கம்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்ற பாரதியின் வாக்குப்படி வள்ளுவன் இயற்றிய திருக்குறள் அதிகமாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூல்களில் ஒன்று. ஓர் அறநூலாக எக்காலத்திற்கும் ஏற்றதாக உள்ளதால், அதை அடிப்படையாகக் கொண்டு சமகால வாழ்வியலில் அறநெறியின் பங்கு என்ன என்பதை இக்கட்டுரை ஆய்கிறது. சமகாலத்திற்கு ஏற்ற சில அறநெறிகளை எடுத்துக்கொண்டு, அவற்றை ஒரு நெறிக்கு இரண்டு குறள்கள் மூலம் ஆராயப்பட்டுள்ளது. ஒவ்வொரு நெறியையும் சார்ந்து தன் வாழ்க்கையை வாழ்ந்த மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சில நெறியாளர்களின் விவரங்களும் விளக்கப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள் :

வள்ளுவன், திருக்குறள், அறநெறி, சமகாலம், வாழ்வியல், நெறியாளர்கள், பொருள், உரை, அதிகாரம், சான்றோர்கள், பங்கு.

முன்னுரை

பல்வேறு மறை நூல்களும் தத்துவ நூல்களும் அவற்றுக்கே உரிய முறையில் மனிதன் செம்மையாக வாழ்வதற்கான உயரிய வாழ்வியல் நெறிகளைப் போதிக்கின்றன. அவற்றில் பொதுமறையாம் திருக்குறள் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியது. எந்த வாழ்வியல் முறைகளை எடுத்துக்கொண்டாலும் சரி, அதற்கு திருக்குறளின் வழிகாட்டுதல் உள்ளது. இது மறுக்கமுடியாத உண்மை. அதனால்தான் எவ்வளவோ சமுதாய மாற்றங்கள் ஏற்பட்டபோதும் திருக்குறள் நெறிகள் மாறாமல் எந்த கால வாழ்முறைக்கும் ஏற்ற தத்துவ கருத்துகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றில் அனைவருக்கும் பொதுவான மற்றும் சமகால வாழ்வியலின் அடித்தளமான அறநெறியின் சில முக்கியக் கூறுகளைக் காண்போம்.

இறைத்தத்துவம்

இறை வழிபாடு உலகின் பெரும்பான்மை மக்களின் மரபாக உள்ளது. இறை நெறியியல் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் வழியாக கருதப்படுகிறது. ஆனால் தற்போதய சமுதாயத்தில் சிலர் அளவின்றி கிடைக்கும் ஊடக கவர்ச்சியிலும், தவறான சித்தாந்தங்களிலும் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபட்டு பின்னர் குற்றவுணர்ச்சியில் மனவருத்தம் ஆட்கொண்டு மீள முடியாமல் தவிக்கின்றனர். அவர்களுக்கு வள்ளுவன் கூறுவதாவது

குறள் 7:

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்
கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது".**

பொருள்: "தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது. (மு வரதராசனார் உரை)".

குறள் 8:

**"அறவாழி அந்தணன்தாட் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"**

பொருள்: "அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்றக் கடல்களைக் கடக்க முடியாது. (மு. வரதராசனார் உரை)".

கடவுள் உள்ளமையில் நம்பிக்கை கொண்டு, உலகப் படைப்பின் உட்பொருளை உணர்ந்து ஒழுகும் வாழ்க்கை நெறியைப் பற்றிக்கூறும் வள்ளுவப்பெருந்தகை குற்றவுணர்ச்சியிலிருந்து வெளிவரும் வழியையும் கூறுகிறார். குற்றவுணர்ச்சி நீங்கி நல்வழி நாடும் நன்மனத்தோரால் அறநெறி சிறக்குமல்லவா!

கூடா ஒழுக்கம்

தற்கால சமுதாயத்தில் தவறான நட்புகளாலும் சிலர் சீரற்ற நட்பிலும் நெறித் தவறியவர்களின் சவகாசத்தினாலும் வாழ்க்கையைத் தொலைத்து விடுகின்றனர். அவ்வாறு நடக்கும் கூடா ஒழுக்கத்தினரைப் பற்றி திருக்குறள் இருபத்தெட்டாம் அதிகாரத்தில் (கூடா ஒழுக்கம்) விவரிக்கின்றது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்

குறள் 277:

"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
முக்கிற் கரியார் உடைத்து "

பொருள்: "குன்றிமணியின் புறத்தில் காணப்படும் நிறம்போல வேடத்தில் செம்மையுடையவர்களாகக் காணப்பட்டாலும், அக்குன்றிமணியின் மூக்கினைப் போல மனம் இருண்டு இருப்பவரை உடையது இவ்வுலகம் (திருக்குறளார் வீ. முனிசாமி உரை)".

குறள் 279:

"கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்
கன்ன வினைபடு பாலால் கொளல்" .

பொருள்: "வடிவால் நேரானது என்றாலும் செயலால் அம்பு கொடியது. கழுத்தால் வளைந்தது ஆயினும் செயலால் யாழ் இனிது. அதனால் தோற்றத்தால் அன்றிச் செயலால் மனிதரை எடை போடுக. (சாலமன் பாப்பையா உரை)"

ஆகவே பழகுவோரை நன்கு பகுத்தாய்ந்து ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கினை வலியுறுத்துகிறார் வள்ளுவர். "கூடா நட்பு கேடாய் முடியும்" என்பது உண்மை. கூடா ஒழுக்கத்தினரை விலக்கி நற்குணம் மேலோங்கியரை பாராட்டி நட்பு கொண்டால் அறநெறி தானாகவே சிறக்கும்.

நற்கல்வியின் முக்கியத்துவம்

"கௌரா தமிழ் அகராதி, பக்கம் 233ல் "கல்வி" என்ற சொல்லுக்கு அறிவு, கற்றல், நூல், வித்தை, பயிற்சி, உறுதி, ஊதியம், ஓதி, கரணம், கலை, கேள்வி, சால்பு, தேர்ச்சி, விஞ்சை போன்ற பல்வேறு விளக்கங்களை அளிக்கிறது". இது கல்வி என்பதன் விரிவான பொருள்களை விளக்குகிறது. வள்ளுவரும் இதை ஒருபடி மேல்சென்று நாற்பதாவது அதிகாரமான "கல்வி" கீழ்கண்டக் கருத்துக்களை போதிக்கிறார்.

குறள் 394:

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்".

பொருள்: "மக்களிருவர் உவக்குமாறு கூடி அவர் நினைக்குமாறு பிரிதல் போலும் : கற்றோர் செய்யுந்தொழில். இஃது இன்பம் நுகரினும் வினை செய்யினும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியாலாமென்றது. (மணக்குடவர் உரை)"

குறள் 399:

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்".

பொருள்: "தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள். (கலைஞர் மு.கருணாநிதி உரை)"

இவ்வாறு வயது வரம்பின்றி தொடர் கல்வியின் அவசியத்தை வள்ளுவர் பெருமான் வலியுறுத்துகிறார். அதற்கு ஏற்ப இன்றைய உலகமும் நற்கல்வியை பற்பல முறைகளில் வாரி வழங்குகிறது. அதை நல்வழியில் கற்று நம்மையும் நம்மை சார்ந்தோரையும் அறநெறியில் மேம்படுத்தல் நமது கடமைகளில் ஒன்று.

திறமையும் தகுதியும்

அறிந்தும், ஆராய்ந்தும் செயல்படும் திறமையுள்ளவர்களுக்கு மட்டுமே வேலைகளைக் கொடுக்க வேண்டும், இல்லையெனில் அது வீணாகும். இதை வாழ்வின், அரசின், சமுதாயத்தின் எல்லாத்துறைகளிலும் நாம் கண்டு வரும் ஒரு நிகழ்வாகும். இதையே ஐம்பத்து இரண்டாம் அதிகாரமான தெரிந்து வினையாடலில் வற்புறுத்துகிறார்.

குறள் 512:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை".

பொருள்: "பொருள் வரும் வழியை விரிவாக்கி, வந்த பொருளால் மேலும் செல்வத்தை வளர்த்து, அப்போது அதனாலும் வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்கக் கூடியவன் பணியாற்றுக.(சாலமன் பாப்பையா உரை".)

குறள் 515:

"அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று".

பொருள்: "தொழிலினைத் தக்கபடி ஆராய்ந் தறிந்து முடிவு செய்ய வல்லவனையல்லாமல், 'இனி நம்மிடத்தில் அன்பு உள்ளவன்' என்ற காரணத்தினால் தொழிலின்மேல் ஒருவனை அமர்த்தும் தன்மை கூடாது.(திருக்குறளார் வீ. முனிசாமி உரை)".

இக்கருத்து இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமானது. எனவே திருவள்ளுவரின் கருத்துக்கள் நமக்கு மிகப் பெரிய பாடத்தை கற்பிக்கின்றன. தகுதியும் திறமையும் கொண்ட நற்றோரை தேர்ந்தெடுத்து பணிகளை மேற்கொண்டால் நெறி வழி நின்று அந்நல்லோர் அறநெறியை மேம்படுத்துவர்.

இல்வாழ்க்கை

தமிழரின் நெறி சிறந்த இல்வாழ்க்கை தற்காலத்தில் நாகரீக மோகத்தாலும், புறக்கலாச்சாரங்களின் படையெடுப்பாலும் ஒரு சில இடங்களில் தன்னிலை இழந்து கொண்டிருக்கிறது. புனிதமான காதல், இல்லாளின் மேன்மை, இல்லறத்தலைவனின் ஒழுக்கம், பெற்றோர் மற்றும் குழந்தைகளின் மேம்பாடு ஆகியவை புண்படக் காரணம் ஒரு சிலர் தவறான முன்னுதாரணமாக விளங்குவதாலும் அது பற்றியச் செய்திகள் ஊடகம் வாயிலாக முன்னுரிமை பெற்று அனைவருக்கும் பரப்பப்படுவதாலும் ஆகும். இக்குறைகளைக் களைய திருக்குறளின் ஐந்தாவது அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ள வள்ளுவனின் இல்வாழ்க்கை நெறிகள் உதவும். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

குறள் 46:

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்".

பொருள்: "ஒருவன் அறநெறியில் இல்வாழ்க் கையைச் செலுத்தி வாழ்வானானால், அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன? (மு.வரதராசனார் உரை)".

குறள் 48:

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து".

பொருள்: "மற்றவர்களை அவர்களின் வழியில் வாழச்செய்து, தானும் அறத்திலிருந்து விலகாமல், மனைவியுடன் வாழும் வாழ்க்கை, துறவறத்தார் காட்டும் பொறுமையிலும் வலிமை மிக்கது. (சாலமன் பாப்பையா உரை)".

தற்போது தமிழரின் நெறியியல் வாழ்வு மீண்டும் அமைய பல இயக்கங்களும் பெரு முயற்சி மேற்கொண்டு நாடு மற்றும் தமிழ்ப்பண்பாடு சிறக்க அயராது உழைக்கின்றன. வள்ளுவரின் சமகால வாழ்வியல் அறநெறி குறள்கள் அவற்றுக்குப் பெருந்துணை புரிகின்றன.

உழவு (வேளாண்மை)

உணவே முதன்மையானது, உணவே மனித வாழ்வின் அடிப்படைத் தேவை. அந்த உணவை உற்பத்தி செய்யும் உழவுத் தொழிலின் மேன்மையையும், விருந்தோம்பல் என்ற சமூக வேளாண்மையின் அவசியத்தையும் திருக்குறள் எடுத்துரைக்கிறது. உழவின் முக்கியத்துவத்தையும் உழவியலின் அறத்தையும் நூற்றுநான்காவது அதிகாரமான "உழவு" மூலம் விளக்குகிறார்.

குறள் 1036:

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை".

பொருள்: "உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை.(மு.வரதராசனார் உரை)".

குறள் 1038:

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

பொருள்: "உழுவதைக் காட்டிலும் உரம் இடுதல் நல்லது; களை எடுப்பதும், நீர்

பாய்ச்சுவதும் மிகவும் நல்லது; அதைவிட நல்லது அந்தப் பயிரைப் பாதுகாப்பது (கலைஞர் விளக்க உரை)".

இவ்வாறு உழவு இல்லையென்றால் துறவற தர்மமும் நிலைக்குலையும் என்றும் உழவியலில் உள்ள செய்முறை நெறிகளும் மிகவும் முக்கியம் என்றும் வாழ்வியல் நெறிகளை வள்ளுவர் விளக்குகிறார்.

இதுவரை நாம் திருவள்ளுவர் காட்டிய சமகால வாழ்வியலில் அறநெறியின் பங்கு என்பதின் சில துளிகளைக் கண்டோம். இந்த நெறிகளை எவரேனும் பின்பற்றி சமகாலத்தில் வாழ்ந்து காட்டியிருக்கிறார்களா என்ற வினாவும் எழும். ஆதலால் அப்படி வாழ்ந்த மற்றும் வாழும் சில சான்றோர்களின் விவரங்களையும் சிறிது காண்போம்.

இறைத்தத்துவம் - வேதாத்திரி மகரிஷி (1911-2006);

அருட்தந்தை, பாமர மக்களின் தத்துவ ஞானி என்ற அடைமொழிகளுடன் அழைக்கப்பட்ட வேதாத்திரி மகரிஷி உலக அமைதிக்காக அருந்தொண்டாற்றிய ஒப்பற்ற சிந்தனையாளர். மனவளக்கலை பயிற்சி வழியாக மனவளக்கலை, தனிமனித அமைதி, அறிவியலுடன் ஆன்மீகம், உலக அமைதி, வாழ்க வளமுடன், வாழ்வியல் விழுமியங்கள் போன்ற தனது வாழ்வியல் அறநெறிகள் மூலம் எளிய மக்களின் மேன்மைக்கு பாடுபட்டவர்.

நற்கல்வியின் முக்கியத்துவம் - முனைவர் விஜய லட்சுமி நவநீதகிருட்டிணன் அம்மையார் (1946);

இவர் ஒரு தமிழ்நாட்டு நாட்டுப் புறவியலாளர், கிராமிய இசைக் கலைஞர் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் ஆவார். தமிழ் நாட்டுப்புறப் பாடல்களை உயிர்ப்பிக்கும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். எளிய கிராமம் சார்ந்த வாழ்வியல் நெறிகளை சமகாலத்தில் பிரபலப்படுத்தியதுடன் தானும் வாழ்ந்து வருகிறார். அரசுகளின் விருதுகளையும் பெற்றுள்ளார்.

திறமையும் தகுதியும் - அப்துல் கலாம் (1931-2015)

தனது தாய்மொழியான தமிழ் வழியில் கல்வி பயின்று, அறிவியல் துறையில் உலக சாதனைகள் புரிந்து நாட்டின் பாதுகாப்பிற்காகச் செய்து காட்டியவர்.. தகுதி மற்றும் திறமை மூலம் குடியரசுத் தலைவரானார். அவ்வுயர்ந்த பதவியிலும் சைவ உணவுடன் எளிய வாழ்க்கை வாழ்ந்து காட்டினார். நாடெங்கும் படிக்கும் மாணவ மாணவிகளிடம் கூட நாட்டின் மீது தேசப்பற்று ஏற்படச் செய்தவர் தற்கால மாணவர் உலகத்திற்கு ஒரு வழிகாட்டியாக தற்போது எல்லோராலும் உருவாக்கப்படுகிறார்.

உழவு (வேளாண்மை)- கோ.நம்மாழ்வார் (1938-2013)/ நெல் ஜெயராமன் (1968-2018)

'இயற்கை வேளாண் விஞ்ஞானி' கோ.நம்மாழ்வார் *(1938 2013)* வாழ்நாளின் பெரும்பகுதியை இயற்கை விவசாயத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலேயே செலவிட்டவர். தமிழ்நாட்டின் மூலை முடுக்கெங்கும் பயணம் செய்து, அவர் உருவாக்கி வைத்துள்ள இயற்கை வழி விவசாயிகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்களையும் கற்றவரையும் இயற்கை விவசாயத்தின் பக்கம் அழைத்துச் சென்றவர்.

நெல் ஜெயராமன் *(1968–2018)* ஒரு விவசாயி, நம்மாழ்வாரின் பணியால் ஈர்க்கப்பட்டு பாரம்பரிய நெல் வகைகளைக் காத்து, இயற்கை வேளாண்மையை பரப்பியவர்; *174*க்கும் மேற்பட்ட அழியும் நிலையில் இருந்த நெல் வகைகளை மீட்டெடுத்து விவசாயிகளுக்குக் கொண்டு சேர்த்தவர். புற்றுநோய் விழிப்புணர்வு ஏற்படுத்தி அதற்கும் பாடுபட்டவர்.

உழவு சார்ந்த வாழ்வியல் நெறிகளை மீட்டெடுத்து சமகாலத்தில் நெறிப்படுத்தியதில் மேற்குறிப்பிட்ட இருவரின் பங்கு போற்றுதலுக்குரியது.

முடிவுரை

வள்ளுவப் பெருமான் காட்டிய அறநெறியின் பங்கு சமகால வாழ்வியலில் எவ்வாறு உடன்படுகிறது என்பதை ஒரு சில திருக்குறள்கள் மூலமும் அவற்றை வாழ்ந்து காட்டிய சில தற்கால சான்றோரின் நெறிகள் மூலமும் அறிந்துகொண்டோம். நாமும் வள்ளுவனைக் கற்றறிந்து அறநெறியைச் சார்ந்து நம்முடைய சமகால வாழ்க்கையைத்

தொடரச்செய்து நாட்டுக்கும், நமது வாரிசுகளுக்கும் உலகத்திற்கும் உதாரணமாக நம்மால் முடிந்த அளவில் வாழ்ந்து காட்டுவோம். அதுவே தமிழ் கூறும் நல்லுலகிற்கு நாம் செய்யும் சிறந்த சேவையாகும்.

மேற்கோள்கள்:

முதன்மை ஆதாரம் (References - Primary)

- முனைவர் நா சுப்பு ரெட்டியார் – வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் – 2004 தமிழ் இலக்கியத்துறை – சென்னைப் பல்கலைக்கழகம் – அவ்வை பதிப்பகம் சென்னை
- திருக்குறள் உரைகள் ONLINE – மு வரதராசனார், பரிமேலழகர், மணக்குடவர், தேவநேயப்பாவாணர், கலைஞர் கருணாநிதி, ஸோலோமென் பாப்பையா, நாமக்கல் கவிஞர், திருக்குறள் வீ முனுசாமி, AT <https://www.valaitamil.com/the-praise-of-god-141.html>

வேதாத்திரி மகரிஷி

- பா.சம்பத்குமார் – முனைவர் ஜே ரோசாலாத் "வேதாத்ரியும் வேதாத்ரியமும்" – 2018 ஷான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ் மலர் 2 இதழ் 4 – ஏப்ரல் 2018 - ISSN 2454 – 3993

விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் அம்மையார்

- <https://www.thetalentedindian.com/vijayalakshmi-navaneethakrishnan-the-saviour-of-tamil-folk-art/>
- Indu Nair - Indology - The song of the earthy Gods- Page 64- Life Positive- E Book- May 2010 issue

அப்துல் கலாம்

- <https://www.seu.ac.lk/researchandpublications/symposium_fia/2016/Abdhulkalam.pdf>

நம்மாழ்வார்

- கோ நம்மாழ்வார் நான் நம்மாழ்வார் பேசுகிறேன் 2017 – விகடன் பிரசுரம் சென்னை – ISBN 9788184766493

நெல் ஜெயராமன்

- தமிழக அரசு 12ம் வகுப்பு தாவரவியல் பாடநூலில், "இவர் நெல் ஜெயராமன்" என்ற பாடக்குறிப்புகள்
- https://www.bbc.com/tamil/india-46463801-NelJayaraman Interview with BBC

துணைமை ஆதாரம் (Refernces- Secondary)

- பருவ மற்றும் நாளிதழ்களிலும், வலைத்தளங்களிலும் கிடைத்த சம்பந்தப்பட்ட சொற்பொழிவுகள், கட்டுரைகள், நேர்முகக் காணல்கள் முதலியவை.